முருகப்பெருமான் துணை

**மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.05.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. பேருலகம் தரும பலம் காண
   பிரணவக்குடில் படைத்தருளும்
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே குரோதி தகர் திங்கள்
   குறிப்பாக இருபானீர் திகதி கதிர்வாரம்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2024, ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசி
   தேசிகனுக்கு ஏயர்கோன் கலிக்காம நாயனாரும்
3. யானுமே உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான ஓங்காரக் குடில்
   ஞான சபைமட்டுமல்ல அப்பனே
   நன்மைதரும் தரும சபையும் ஆகும்
4. ஆகவே அனுகி ஞானியர் தரும்
   அருளமுதை உண்டு வர
   அகமதில் அமைதி நிறைவு
   ஆத்ம ஞான பலமுமாகி
5. ஆகியே தன்னுள் சிந்தையை
   அருட்தயவாக மாற்றியே
   மகிழவே உலக சேமத்துக்கு
   மறுப்பின்றி சேவை ஆற்றும்
6. ஆற்றும் ஞான வான்களாக
   அரங்கமகான் படைக்கின்ற
   ஆற்றல் மிக்க ஞானப்படைகளாக
   அறிவிப்பேன் சூட்சுமம் விளங்கி
7. விளங்கி குருமார்க்கம் விட்டு
   விலகா தொடர்ந்து இனிதே
   களங்கமற சேவை ஆற்றி
   கலியில் ஞானிகள் ஆவர்

8. ஆவரே அரங்கன் அவதார
அற்புதம் நோக்கமறிந்து
அவனியில் அளவிலாத் தேறி
அகிலத்தில் மற்றவரும் தன்போல்

9. தன்போல ஞான பலம் பெற
தவராஜன் புகழை பெருமையை
இன்பமுற உலகெல்லாம் கொண்டு சென்று
இனிதே சேவை ஆற்றி மகிழ்வர்

10. மகிழவே அரங்கமகான் ஞானம்
மாதருமமும் நாடி வருபவர்க்கு
மகிழவே தன்னை தேற்றுவதுடன்
மற்றவரும் அடைய வகை செய்து

11. செய்துமே உலகையே மாற்றும்
சிறப்பான மார்க்கமாக இருக்க
அய்யமற அனைவரும் அனுகிட
அறிவிப்பேன் ஞானிகளாக சிறப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–